**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066023

1. District : Kanchipuram PS: V & AC, Kanchipuram Year: 2019 FIR No.: 03 Date: 10.06.19
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Cr.PC Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: - Sections பிரிவுகள்: -
(iii) Act சட்டம்: - Sections பிரிவுகள்: -
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : Date from : 01.11.18 Date to : 01.11.18
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.30 hrs Time to : 21.30 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 01.11.18 Time : -
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 01.11.18 Time : 16.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.06.19 நேரம் 16.30 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் North East about 45 km
Beat Number : - (b) Address : Sub-registrar office, Sriperumbudur, Kanchipuram District.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. T. Prakash (b) Father's/ Husband's Name : -
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : - (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Special Tahsildar Addl. Deputy Inspector Cell officer (g) Address : Chennai-Salem Green Way Road Scheme, Unit-4, Kanchipuram District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) T. P. Ganesh
Sub-Registrar,
Sriperumbudur Sub-Registry
Kanchipuram District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

GCP-240-34(Type-2) 90,000 Cps.-27.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
During surprise check unaccounted money of Rs. 29,000/- was seized.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Rs. 29,000/-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 10/6/19.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 10/6/19
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் T. Sivapathasekaran
Rank: நிலை Deputy Supdt. of Police No. எண்
VAC, Kanchipuram.

**Continuation of Column No.12 of FIR in Kanchipuram V&AC Crime No.3/AC/2019/KM, dated 10.06.2019**

| |
|---|
| Accused Officer:<br><br>Tr.P.Ganesar,<br>Sub-Registrar,<br>Sriperumbudur Sub-Registry,<br>Kancheepuram District and others. |

அனுப்புநர் திரு.தி.பிரகாஷ், பி.காம்., தனி வட்டாட்சியர், (நி.எ)(தே.நெ.)., சென்னை-சேலம் பசுமை வழிச்சாலைத் திட்டம், அலகு-4, காஞ்சிபுரம் மாவட்டம் பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, காஞ்சிபுரம் (பொ) திருவள்ளூர் மாவட்டம். ந.க.112/2018 தே.நெ. நாள் 02.11.2018. அய்யா, பொருள்- திடீர் கூட்டாய்வு - காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு திருபெரும்புதூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு உரிமை கோராத பணம் ரூ.29,000/- (ரூபாய் இருபத்தி ஒன்பதாயிரம் மட்டும்) கைப்பற்றப்பட்டது - செயல்முறைகள் மற்றும் அறிக்கை அனுப்பி வைப்பது தொடர்பாக, பார்வை – 1, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை காஞ்சிபுரம் அவர்களின் கடித நாள் 01.11.2018. 2. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.7156/2018/அ3, நாள் 01.11.2018 பார்வை 2ல் காணும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ஆணையின்படி காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் உள்ள அரசு அலுவலகங்களில் ஆய்வு மேற்கொள்ள மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் துணை ஆய்வுக் குழு அலுவலர் இருவரும் சென்னை பிரிவு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அதிகாரிகளுடன் பணியில் உள்ளதால் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினருடன் கூட்டாய்வு செய்ய துணை ஆய்வுக்குழு அலுவலராக நியமனம் செய்து ஆணையிடப்பட்டது. ஸ்ரீபெரும்பந்தூர் சார்பதிவகத்தில் பத்திரங்கள் பதிவு செய்வதற்காக பொது மக்களிடம் கையூட்டாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில் 01.11.2018 ஆம் தேதி காஞ்சிபுரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.T.சிவபாதசேகரன் மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு 01.11.2018 ஆம் தேதி மாலை 17.30 மணி முதல் தொடங்கப்பட்டு இரவு சுமார் 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கூட்டாய்வின் போது சார் பதிவாளர் அலுவலகத்தில் உரிமை கோரப்படாத பணம் ரூ.29,000/- (ரூபாய் இருபத்தி ஒன்பதாயிரம் மட்டும்) கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக ஸ்ரீபெரும்பந்தூர் சார் பதிவாளர், உதவியாளர், பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், Data Entry operator ஆகியோரிடமிருந்து

தனித்தனியாக எழுத்து மூலமான விளக்கம் பெறப்பட்டது. மேலும் இது தொடர்பான துணை ஆய்வுக் குழு அலுவலர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட செயல்முறைகள், சார் பதிவாளர் மற்றும் 7 அலுவலகப் பணியாளர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவை மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேலும் கைப்பற்றப்பட்ட உரிமை கோரப்படாத பணம் ரூ.29,000/- (ரூபாய் இருபத்தி ஒன்பதாயிரம் மட்டும்) நீதிமன்றத்தில் வைப்புத் தொகையாக செலுத்தும் பொருட்டு இக்கடிதத்துடன் தங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஒப்பம்XXX தனி வட்டாட்சியர் (நி.எ.)(தே.நெ).,சென்னை - சேலம் பசுமை வழிச்சாலைத் திட்டம், அலகு -4, காஞ்சிபுரம் மாவட்டம். நகல் - மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், (இ) காஞ்சிபுரம்.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் அவர்களின் இரு துறை திடீர் கூட்டாய்வு குறித்த செயல்முறைகள்.

முன்னிலை:- திரு.T.பிரகாஷ்,

நாள்:- 01.11.2018.

பொருள் :- திடீர் கூட்டாய்வு - காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - ஸ்ரீபெரும்புதூர் - சார் பதிவாளர் அலுவலகம் - 01.11.2018 திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான -செயல்முறைகள்.

<u>ஆணை:-</u>

ஸ்ரீபெரும்புதூர் சார்பதிவகத்தில் பத்திரங்கள் பதிவு செய்வதற்காக பொது மக்களிடம் கையூட்டாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், இன்று 01.11.2018 ஆம்தேதி இவ்வலுவலகத்தில் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கான துணை ஆய்வுக்குழு அலுவலர் பொறுப்பு திரு.பிரகாஷ், (தனி வட்டாட்சியர்) நில எடுப்பு பிரிவு, சென்னை - சேலம் அதிவிரைவு எட்டுவழி சாலை, காஞ்சிபுரம் தலைமையில், காஞ்சிபுரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.T.சிவபாதசேகரன் மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், ஸ்ரீபெரும்புதூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்று 01.11.2018-ம் தேதி மாலை சுமார் 17.30 மணி முதல் இரவு சுமார் 21.00 மணி வரை மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது அலுவலகத்தில் சார்பதிவாளர் திரு.பொ.கணேசர், உதவியாளர், திரு.R.ரவி, பதிவறை எழுத்தர், திரு.தீ.சதிஷ்குமார் மற்றும் அலுவலக உதவியாளர், திரு.ந.ஏழுமலை ஆகியோரும் தனியார் மென்பொருள் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தம்

அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள Data Entry Operators 1) திரு.எம்.சங்கர், 2) திரு.B.சதீஷ்குமார் மற்றும் திரு.P.தமிழ்மணி ஆகியோர்கள் அலுவலகத்தில் இருந்தனர். இந்த ஆய்வின்போது சார்பதிவாளர் அவர்களின் பர்சில் பணம் ரூ.250/- வைத்திருந்தார். இது சம்மந்தமாக அவர் தனி நபர் ரொக்க பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். அது அவருடைய கைசெலவிற்காக வைத்திருந்த பணம் என தெரிவித்ததால் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அவருடைய லன்ச்பேக்கை சோதனை செய்தபோது பணம் ரூ.3,000/- இருந்தது. அதுபற்றி துணை ஆய்வுக்குழு அலுவலர் கேட்டபோது சரியான விளக்கம் தெரிவிக்காததால் அந்த பணம் பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பெற்று மறைத்து வைக்கப்பட்ட பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது அறையில் இருந்த கொடிநாள் ரசீது புத்தக எண 11740, 32501, 32502, 32503 ஆகிய புத்தகங்களின் கொடிநாள் பணம் வசூலிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. (ஒவ்வொரு புத்தகமும் ரூ.100/- மதிப்பிற்கான ரசீது 100 உள்ளது) 11740, 32501 ஆகிய புத்தகங்களில் வசூலான பணத்தில் ரூ.15,000/-த்தை 01.07.2018 ஆம் தேதி உதவி இயக்குநர் முன்னால் ராணுவத்தினர் நல அலுவலகத்தில் 23.07.2018 அன்று ஒப்படைத்து ஒப்புகை பெறப்பட்டுள்ளது. 31501 புத்தகத்தில் 50 ரசீதுக்கான பணமும், 32502 என்ற புத்தகத்தில் 100 ரசீதுக்கான பணமும், 32503 புத்தகத்தில் 63 ரசீதுக்கான பணமும் ஆகமொத்தம் ரூ.21300/- கொடிநாள் பணமாக வசூலித்த தொகை ரசீதுடன் ஒப்பிட்டு பார்த்ததில் சரியாக இருந்தது. அதனை சார்பதிவாளரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் Data Entry Operator திரு.P.தமிழ்மணி அவர்கள் பொதுமக்களிடமிருந்து பதிவு கட்டணமாக பெற்றிருந்த ரூ.3,34,195/- க்கான Demand Draft 15 லும், மற்றும் பொதுமக்களிடமிருந்து முத்திரைதாள் கட்டணமாக பெற்றிருந்த ரூ.8,43,150/- க்கான Demand Draft – 11 –ம், மேலும் பொதுமக்களிடமிருந்து வில்லங்க சான்றிதழ்க்கான கட்டணமாக பெற்றிருந்த ரூ.1121/-க்கான Demand Draft –1 – ம், ஆக மொத்தம் ரூ.11,78,466/- தொகைக்கான Demand Draft –24 இருந்தது. அதனை சரிபார்த்து சார்பதிவாளரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் பதிவு கட்டணமாக பணமாக பெறப்பட்ட தொகை ரூ. 1,335/- உட்பிரிவு கட்டணமாக பெறப்பட்ட பணம் ரூ.320/-, குறுந்தகடு கட்டணமாக பெறப்பட்ட பணம் ரூ.650/-, இணக்க கட்டணமாக ரூ.280/- ஆகமொத்தம் ரூ.2,585/- ஆகும். அதனை சரிபார்த்து சார்பதிவாளரிடமே ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் உதவியாளர் திரு.ரவி அவர்களின் சர்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.120/- அந்த பணத்தை பற்றி விசாரிக்க, அவர் தனது கைசெலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால், அப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. Data Entry Operator

திரு.B.சதீஷ்குமார் பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் பணம் ரூ.120/-. அந்த பணத்தை பற்றி விசாரிக்க அவர் தனது கைசெலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. Data Entry Operator திரு.தமிழ்மணி அவர்கள் சர்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.300/-. அந்த பணத்தை பற்றி விசாரிக்க அவர் தனது கைசெலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அட்மிஷன் ரூமில் இருந்து பதிவறை ஒழுத்தர் திரு.D.சதிஷ்குமார் அவர்களின் சர்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.220/-. அந்த பணத்தை பற்றி விசாரிக்க அவர் தனது கைசெலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அலுவலக உதவியாளர் திரு.ந.ஏழுமலை அவர்களின் சட்டை பாக்கெட்டில் பணம் ரூ.80/- வைத்திருந்தார். அந்த பணத்தை பற்றி விசாரிக்க அவர் தனது கைசெலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மற்றும் Data Entry Operator திரு.சங்கர் அவர்கள் சர்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.190/-. அந்த பணத்தை பற்றி விசாரிக்க அவர் தனது கைசெலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால். அப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவ்வறையில் கீழே இருந்த பணம் ரூ.500x2=1000/- கைப்பற்றப்பட்டது. இந்த பணத்திற்கு யாரும் உரிமை கோராததால். அந்த பணம் பொது மக்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் அனைத்து அறைகளிலும் சோதனை செய்யப்பட்டது. மேலும் முதல் தளத்தில் உள்ள அறைகளிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அலுவலகத்தில் பின்புறத்தில் கழிப்பறைகளை சோதனை செய்தோம். பிறகு கழிவறைக்கு செல்லும் வழியில் இருந்த மகேந்திரன் ஜெனரேட்டரின். அடிப்பகுதியில் சந்தேகப்படும்படியான வெள்ளை நிற பேப்பரில் சுருட்டி மறைத்து வைக்கப்பட்டிருந்ததை சார்பதிவாளர் முன்னிலையில் பிரித்து பார்த்தபோது அதில் ரூ.2000x3=6000, ரூ.500x36=18,000/-, ரூ.100x10=1000 ஆக மொத்தம் பணம் ரூ.25,000/- இருந்தது. இதுகுறித்து சார்பதிவாளரிடம் விசாரித்தபோது அவர் தனக்கு இதுபற்றி ஏதும் தெரியாது என்று தெரிவித்தார். இந்த பணத்திற்கு யாரும் உரிமை கோராததால் அந்த பணம் பொது மக்களிடம் லஞ்சமாக பெற்று மறைத்து வைக்கப்பட்ட பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் சார்பதிவாளர் அறையில பணிபுரிந்து கொண்டிருந்த ஒருவரை விசாரிக்க அவர் தனது பெயர் மோகன் என்றும் தான் எண்.67, செங்குந்தர் நகர், பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், இவ்வலுவலகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பணிபுரிந்து

வருவதாகவும், தினமும் சார்பதிவாளர் தனக்கு ரூ250/-த்தை சம்பளமாக தருவார் எனவும் தெரிவித்தார். மேற்படி சோதனையின்போது அலுவலகத்தில் இருந்த பொது நபர்களை சோதனை செய்தபோது அரசு ஊழியர்களான ஒரகடம் சிப்காட்டில் பணிபுரியும் திருமதி.சாந்தினி க/பெ. ஸ்ரீதர், புராஜெக்ட் ஆபிசர், 2) திரு.சி.பிரகாசம், அசிஸ்டெண்ட் ஆபிசர் ஆகியோர் ஒரகடம் சிப்காட் நிலத்தை M/s.இந்திராணி ஆட்டோமெட்டிக் & இன்ஜினியரிங் கம்பெனி ரெப்ரசன்ட் பாரத் பூசன்பூரி என்பவருக்கு சிப்காட் இடத்தை 99 வருடங்களுக்கு லீஸ்க்கு பதிவு செய்ய வந்ததாக தெரிவித்தனர். திருமதி.புவனேஸ்வரி க/பெ. சரவணன், சீனியர் ரெவின்யூ இன்ஸ்பெக்டர், நேஉ்னல் ஹைறவேஸ், பெங்களூர் - சென்னை எக்ஸ்பிரஸ் யூனிட்-3, காஞ்சிபுரத்தில் பணிபுரிவதாகவும், அவர்களை விசாரித்ததில் பெங்களூர் சென்னை எக்ஸ்பிரஸ் ரோடு விரிவாக்கம் சம்மந்தப்பட்ட சர்வே எண்கள் பற்றி விவரம் பெற அரசு பணிழியாக வந்ததாக தெரிவ்தார். உள்வராண்டா பகுதியில் இருந்த திரு.கோதண்டராமன் ஆ/வ 48, த/பெ. கிருஉ்ணன், நெ.119, காந்திரோடு, ஸ்ரீபெரும்புதூர், ஜெகநாதபுரம், 6வது தெரு, சேத்துபட்டு, சென்னை-31 என்பவரை விசாரிக்க ஆவண எண்.7274/18 ஊன்ற பதிவு செய்த ஆவணத்தை திரும்ப பெற வந்திருப்பதாக தெரிவித்தார், திரு.காசிநாதன் ஆ/வ.32, த/பெ. நந்தகோபால், நெ.77/99, சின்னமணியக்கார தெரு, செங்கல்பட்டு என்பவர் வெளிவராண்டாவில் நின்றுக்கொண்டிருந்தவரை விசாரிக்க தான் பதிவு திருமணத்தை பற்றி விசாரிக்க வந்திருப்பதாக தெரிவித்தார். திரு.பாஸ்கர், ஆ/வ.30 த/பெ.தனபால், பிள்ளைப்பாக்கம், சிவன்கோயில் தெரு என்பவர் உள் வராண்டாவில் நின்றுக்கொண்டிருந்தார். அவரை விசாரிக்க சர்வே எண்.59 பிள்ளைப்பாக்கம் என்ற இடத்தின் வழிக்காட்டு மதிப்பீடு சம்மந்தமாக விசாரிக்க வந்திருப்பதாக தெரிவித்தார். திரு.விஜயகுமார், ஆ/வ.31, த/பெ. ஆறுமுகம், நெ.51, பத்தேல்பட் தெரு, திருவள்ளூர் என்பவர் வெளி வராண்டாவில் நின்றிருந்தாவரை விசாரிக்க தான் M/s.Lysaght Taprline Poles Pvt.., என்ற கம்பெனியில் தான் HR ஆக பணிபுரிந்து வருவதாகவும், EC பெறுவது சம்மந்தமாக மனு செய்திருப்பதாகவும் தெரிவித்தார். (Recpt. No.30629/18). இதே போன்று அலுவலகத்தில் இருந்த சிலரை விசாரித்ததில் இவ்வலுவலகத்திற்கு வந்து போவதற்கான தகுந்த ஆவணங்கள் வைத்திருந்த காரணத்தால் அவர்கள் பெயர்களை தனித்தாளில் குறித்துக்கொண்டு தேவைப்பட்டால் விசாரணைக்கு அழைக்கும்போது ஆஜராகவேண்டும் என்று அனுப்பப்பட்டது. 1) வருகை பதிவேடு 2) "H" கணக்கு பதிவேடு 3) தனிநபர் ரொக்க பதிவேடு 4) "A" கணக்கு பதிவேடு 5) கொடிநாள் பணமாக வசூலிக்கப்பட்ட பண விபரம், ஆகியவற்றின் உண்மை நகலின் சார்பதிவாளர் சான்றொப்பமிட்ட நகல்கள் மேல் விசாரணைக்காக

பெறப்பட்டது. மேற்படி கூட்டாய்வின் போது "லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம்" என்ற அறிவிப்பு பலகை பொது மக்கள் காத்திருப்பு அறையில் ஓரமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இந்த சோதனையில் சார்பதிவாளர் திரு.கணேசர் அவரது லன்ச்பேக்கிலிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,000/-மும், மகேந்திரா ஜெனரேட்டரின் அடிப்பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பணம் ரூ.25,000/- மும் EC அட்மிசன் அறையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பணம் ரூ.1,000/- ஆக மொத்தம் ரூ.29,000/- த்தை தகுந்த முகாந்திரம் கூறாததால், அந்த பணம் பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பெற்று மறைத்து வைக்கப்பட்ட பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக இவ்வலுவலகத்தில் ஆஜரிலிருந்த அலுவலர்களிடம் எழுத்து மூலமாக தனித்தனியாக விளக்கம் பெறப்பட்டது. இந்த இரு துறை திடீர் கூட்டாய்வு இன்று 01.11.2018-ஆம் தேதி மாலை 17.30 மணி முதல் இரவு சுமார் 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த ஆய்வின்போது உடன் இருந்தவர்கள் விவரம்.

(ஒப்பம்/-------)
T.சிவபாதசேகரன்,
காவல் துணை
கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை.
காஞ்சிபுரம்.

(ஒப்பம்/-------)
V.கணேசன்
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை
காஞ்சிபுரம்.

(ஒப்பம்/-------)
D.சிவகாமி
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும
கண்காணிப்புத்துறை
காஞ்சிபுரம்.

(ஒப்பம்/-------)
பொ.கணேசர்
சார்பதிவாளர்,
ஸ்ரீபெரும்புதூர்
காஞ்சிபுரம் மாவட்டம்.

(ஒப்பம்/-------)
திரு.R.ரவி
உதவியாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்
ஸ்ரீபெரும்புதூர்
காஞ்சிபுரம் மாவட்டம்.

(ஒப்பம்/-------)
திரு.தீ.சதிஷ்குமார்,
பதிவறை எழுத்தர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
ஸ்ரீபெரும்புதூர்
காஞ்சிபுரம் மாவட்டம்.

(தி.பிரகாஷ்)
மாவட்ட துணை ஆய்வுக்குழு பொறுப்பு அலுவலர்,
காஞ்சிபுரம்

The above complaint was received by me on 02.11.2018 and a report was submitted to Directorate of Vigilance and Anti-Corruption, Chennai in this regard seeking permission from Head of Department to register a regular case and accorded permission vide Proceedings No.51996/V1/2018, dt.26.03.2019

of the Inspector General of Registration, (Full Additional Charge), Chennai to register a regular case against the A.Os in by DVAC Memorandum SC.39728/2018/REGN/KM, dated 21.01.2019. Subsequently, the case is registered in Kanchipuram V&AC, Cr.No.03/AC/2019/KM u/s 102 Cr.P.C. on 10.06.2019 at 16.30 hrs.

The original FIR along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, Statement of Accused and Cash Rs.29,000/- seized at the time of surprise check, are submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chengalpattu.

T. Sivapathasekaran 10/6/19
**(T.SIVAPATHASEKARAN)**
Deputy Superintendent of Police,
Vigilance & Anti-Corruption,
Kanchipuram.